(8 pages) Reg. No. : .....

Code No. : 20006 **Sub. Code : E 1 TL 21/ F 1 TL 21**

U.G. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2026

இரண்டாம் பருவம்

பகுதி I — தமிழ்

பொதுத்தமிழ் – II தமிழ் இலக்கிய வரலாறு – II

(For those who joined in July 2023 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்வு செய்க.

1. ஒட்டக்கூத்தரால் இயற்றப்பட்ட உலா இலக்கியம் எது?
   (அ) ஆதிஉலா
   (ஆ) மூவருலா
   (இ) திருவாரூர் உலா
   (ஈ) ஏகாம்பரநாதர் உலா

2. இந்தியாவிலேயே முதன்முதலாக நாட்டுடைமையாக்கப்பட்ட இலக்கியம் யாருடையது?
   (அ) பாரதியார்
   (ஆ) பாரதிதாசன்
   (இ) நாமக்கல் கவிஞர்
   (ஈ) தமிழ்ஒளி

3. திரிகூடப்பரக் கவிராயர் எழுதிய குறவஞ்சி ———.
   (அ) அழகர் குறவஞ்சி
   (ஆ) விராவிமலைக் குறவஞ்சி
   (இ) திருக்குற்றாலக் குறவஞ்சி
   (ஈ) திருவாரூர் குறவஞ்சி

4. ஆமணக்குக்கும் யானைக்கும் சிலேடையுடன் பாடியவர் யார்?
   (அ) காளமேகப் புலவர்.
   (ஆ) வீரராகவப் புலவர்
   (இ) சத்திமுத்தப் புலவர்
   (ஈ) ஔவையார்

5. "நன் மொழிக்கு விடுதலை நல்கிட எழுந்திரு! பொன்மொழிக்கு நீ புதுமை ஏற்றுவாய்" – யார் கூற்று?
   (அ) நாமக்கல் கவிஞர் (ஆ) பாரதிதாசன்
   (இ) தமிழ்ஒளி (ஈ) தமிழன்பன்

Scanned with OKEN Scanner

6. 'உடல் ஊனத்திலும் உழைத்து வாழ்ந்தால் இன்பவாழ்வு அமையும்' – என்னும் உட்பொருளைக் கொண்ட சிறுகதை எது?

(அ) கடிதம்

(இ) அந்தியர்கள் (ஈ) செல்வாழை

7. பெரியார் நடத்திய திருக்குறள் மாநாட்டில் நடைபெற்ற நாடகம் எது?

(அ) மணிமகுடம் (ஆ) வேலைக்காரி

(இ) சந்திரமோகன் (ஈ) இராஜ இராஜ சோழன்

8. தமிழுக்குச் செம்மொழித் தகுதி கோரி முதலில் குரல் கொடுத்தவர் யார்?

(அ) தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்

(ஆ) பெரும் புலவர் டி.எல்.கந்தசாமி

(இ) திரு.வி.க.

(ஈ) பரிதிமாற் கலைஞர்

9. 'ஜாதகம்' – என்பதன் தமிழ்ச்சொல் என்ன?

(அ) ஜோதிடம் (ஆ) பிறப்பியம்

(இ) கணியம் (ஈ) கோளகம்

10. 'கலை, கழை, களை' – ஆகிய சொற்களின் பொருள் யாது?

(அ) அயர்வு, மூங்கில், ஆண்மான்

(ஆ) மூங்கில், அயர்வு, ஆண்மான்

(இ) ஆண்மான், மூங்கில், அயர்வு

(ஈ) மூங்கில், ஆண்மான், அயர்வு

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடையளி. வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடுக்க.

11. (அ) 'கலம்பகம்' – என்னும் சிற்றிலக்கியம் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) திராவிட இயக்க நாடகங்கள் குறித்து விளக்கம் தருக.

12. (அ) அபிராமி அன்னையிடம் அபிராமிபட்டர் வேண்டுவன யாவை?

(ஆ) 'இம்பர் வான்.....' எனத் தொடங்கும் வீரராகவப்புலவர் பாடலின் கருத்தை விளக்குக.

13. (அ) 'கத்தியின்றி ரத்தமின்றி....' எனத் தொடங்கும் பாடலில் காணலாகும் காந்தியச் சிந்தனையைக் கூறுக.

(அல்லது)

(ஆ) 'அந்தியர்கள்' என்ற சிறுகதையின் தலைப்புப் பொருத்தத்தை எழுதுக.

Scanned with OKEN Scanner

14. (அ) திருக்குறள் மாநாட்டில் நாவலர் சோமசுந்தர பாரதியார் ஆற்றிய தலைமையுரையை விளக்குக.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியத்தின் தனிச்சிறப்புகள் பற்றிக் கலைஞர் மு. கருணாநிதி கூறுவது யாது?

15. (அ) மொழிபெயர்ப்பின் தேவை குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) பிழை திருத்தம் செய்க.

விறுந்தோம்பல் தமிலரின் சிரந்த பன்பாடு. விறுந்தினர் என்பவர் முன்பின் அரியாத புதியவர்கல். என்னாட்டினறாயினும் எம்மொளியினராயினும் நட்புக்கொள்ளும் நள்ளென்னத்துடன் வீடு தேடி வறுவார்கலாயின் அவர்கலை வறவேற்பார்கல் தமிலர்கல். விறுந்தினறை வரவேற்று உபசறிப்பவர்கல் தாம் மருமை இண்பத்தைப் பெரமுடியும் என்ற நம்பிக்கையும் தமிலரிடம் குடிகொண்டிருந்தது.

பகுதி இ — ($5 \times 8 = 40$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடையளி. வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடுக்க.

16. (அ) பரணி இலக்கியத்தின் பெயர்க்காரணம் கூறி, அமைப்பு முறையைக் கூறுக.

(அல்லது)

(ஆ) தமிழில் உரைநடை வளர்த்த சான்றோர்கள் குறித்து விவரிக்க.

17. (அ) தமிழ்விடு தூதின் முதல் பத்துக் கண்ணிகள் உணர்த்தும் கருத்துக்களைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) சத்திமுத்தப் புலவர், தன்மனைவியிடம் நாரையைத் தூது அனுப்பிய செய்தியை விளக்குக.

18. (அ) 'பாரத சமுதாயம் வாழ்கவே....' எனத் தொடங்கும் கவிதையில் காணப்படும் பாரதியின் கொள்கையைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) 'கடிதம்' என்னும் புதுமைப்பித்தன் சிறுகதையின் கருத்துக்களைக் கட்டுரைக்க.

Scanned with OKEN Scanner

(6 pages) Reg. No. : .....

Code No. : 20008 **Sub. Code : E 1 TL 41/ F 1 TL 41**

U.G. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2026

நான்காம் பருவம்

பகுதி I — தமிழ்

பொதுத்தமிழ் IV – தமிழும் அறிவியலும்

(For those who joined in July 2023 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்வு செய்க.

1. கலைமான் கொம்புகளைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படுகிறது?

(அ) கொம்புப் பற்பம்

(ஆ) சிருங்கிப் பற்பம்

(இ) பற்பம்

(ஈ) புஷ்பம்

2. பரதவர் மீன்பிடிக்கப் பயன்படுத்தும் படகு

(அ) திமில் (ஆ) கலம்

(இ) தோணி (ஈ) நாவாய்

3. தாய் சாய் பிறக்கும் புள்ளிக் கள்வன் – என ஐங்குறுநூறு கூறும் விலங்கினம்

(அ) எருமை (ஆ) நண்டு

(இ) ஆமை (ஈ) முதலை

4. தொல்காப்பியத்தில் இடம்பெறும் 'முன்னம்' என்ற உத்தியின் பொருள்

(அ) உள்ளடக்கம் (ஆ) உருவம்

(இ) குறிப்பு (ஈ) உடலியல்

5. வானியல் அறிவியல் குறித்த செய்தி இடம்பெறும் நூல்

(அ) குற்றாலக் குறவஞ்சி

(ஆ) முக்கூடற்பள்ளு

(இ) மூவருலா

(ஈ) விநாயகர் அகவல்

6. சித்தர்கள் பாடல்கள் பெரும்பாலும் எந்த யாப்பில் அமைந்துள்ளன?

(அ) அகவல்

(ஆ) வெண்பா

(இ) கலிப்பா

(ஈ) வஞ்சிப்பா

Scanned with OKEN Scanner

7. பண்பாட்டுக் காட்சியகம் என்னும் பிரிவில் இடம் பெறுவது

(அ) வரலாற்றுச் சின்னங்கள்

(ஆ) ஓலைச்சுவடிகள்

(இ) சிறுவர் இலக்கியம்

(ஈ) தமிழறிஞர்களின் நூல்கள்

8. மதுரை தமிழ் இலக்கிய மின் தொகுப்புத் திட்டம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?

(அ) 1947 (ஆ) 1998

(இ) 1980 (ஈ) 1960

9. கடிதத்தை முடிக்கும் போது கடிதத்தின் வலப்பகுதியில் இடம் பெறுவது.

(அ) அழைப்பு (ஆ) அனுப்புநர்

(இ) பெறுநர் (ஈ) கையொப்பம்

10. கட்டுரை எவ்வகையைச் சார்ந்தது?

(அ) கவிதை (ஆ) உரைநடை

(இ) செய்யுள் (ஈ) ஹைக்கூ

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க. வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்து எடு.

11. (அ) இலக்கிய நூல்களில் அறிவியல் வளர்ச்சி சார்ந்து அறியலாகும் மான்கள் பற்றிய தரவுகளை எடுத்துரைத்திடுக.

(அல்லது)

(ஆ) தமிழர்களின் தொழில்நுட்ப மேலாண்மையில் நெசவுத்தொழில் நுட்பத்தின் நுணுக்கங்களைத் தெளிவுபடுத்துக.

12. (அ) உலோகங்களின் வகைகளை எடுத்துரைத்திடுக.

(அல்லது)

(ஆ) இலக்கியங்களில் ஆந்தைகள் குறித்த பேரறிவுச் செய்திகளைத் தொகுத்துரைத்திடுக.

13. (அ) முக்கூடற்பள்ளு இலக்கியத்தில் இடம்பெறும் வானிலை அறிவியல் செய்திகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) பரிமேலழகர் உரையில் அமைந்துள்ள அறிவியல் தொழில் நுட்பத்தினை ஆய்க.

14. (அ) யூனிக்கோடின் வளர்ச்சி நிலையினை எடுத்துரைத்திடுக.

(அல்லது)

(ஆ) மின் நூலகங்கள் குறித்த செய்திகளை விளக்கிக் கூறுக.

Scanned with OKEN Scanner

15. (அ) கடிதம் எழுதும் நோக்கங்களையும் அதன் வகைகளையும் விளக்குக.

(அல்லது)

(ஆ) விளக்கக் கட்டுரை என்றால் என்ன? அதன் முக்கிய நோக்கங்களைப் புலப்படுத்துக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க. வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

16. (அ) ஐந்திணைப் பகுப்பில் அமைந்துள்ள சூழலியல் செய்திகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழ் இலக்கியத்தில் நீர் நில மேலாண்மை குறித்த கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

17. (அ) பழந்தமிழ் இலக்கியங்களில் தமிழர்களின் நிலவியல் பாகுபாடு குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) சங்கப் பாடல்களில் அமைந்துள்ள உளவியல் சிந்தனைகளை எடுத்துரைத்திடுக.

18. (அ) காப்பியங்களின் வழி அறியலாகும் அறிவியல் சிந்தனைகளை விளக்கிக் கூறுக.

(அல்லது)

(ஆ) சிற்றிலக்கியங்களில் காணும் அறிவியல் நுட்பங்களை வெளிப்படுத்துக.

19. (அ) இணையத் தமிழ்க் கல்விக் கழகங்களின் வளர்ச்சி நிலையினை விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழ் நாட்டிலுள்ள அறிவியல் ஆளுமைகள் குறித்த செய்திகளை எடுத்துரைத்திடுக.

20. (அ) பொது நன்மை கருதி அரசின் உதவி உங்கள் ஊருக்கு வேண்டி விண்ணப்பக் கடிதம் எழுதுக.

(அல்லது)

(ஆ) நும் ஊரில் நடைபெற்ற ஏறுதழுவுதல் நிகழ்வு குறித்துப் பத்திரிகை ஒன்றிற்குக் கட்டுரை எழுதுக.

———————

Scanned with OKEN Scanner